# உருவக அணி

பாகம் 10

சென்ற முறை பொருளணியில் உள்ள உருவக அணி பற்றிப் பார்த்திருந்தோம். இம் முறை மேலும் மூன்று அணிகள் பற்றிப் பார்ப்போம். தன்மை நவிற்சி அணி, உயர்வு நவிற்சி அணி, தற்குறிப்பேற்ற அணி என்கின்ற அணிகள்தாம் அவைகள்.

இதில் தன்மை நவிற்சி அணியை இயல்பு நவிற்சி அணி என்றும் சொல்வார்கள். நவிற்சி என்றால் சொல்லுதல் என்று பொருள். இதன் அர்த்தம் உங்களுக்கு இப்பொழுது புரிந்திருக்கும். தன்மை நவிற்சி அல்லது இயல்பு நவிற்சி என்றால் ஒரு விடயத்தை உண்மையான முறையில் உள்ளதை உள்ளபடி சொல்வது ஆகும்.

தன்மை நவிற்சி அணியில் மிகைப் படுத்தல்கள் இருக்காது. உதாரணங்கள் இருக்காது. உதாரணங்கள் இல்லாத பொழுது உவமை வருவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகிறது. உருவகப்படுத்தலும் இருக்காது. ஆயினும் கவிதைக்குத் தேவையான அழகு அங்கே இருக்கும்.

தன்மை நவிற்சியில் கவிதை எழுத விரும்புபவர்கள் உவமை, உருவகம், மிகைப்படுத்தல் போன்றவைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும், ஆனால் சொல்லணியில் வருகின்ற எதுகை, மோனை போன்றவைகளை தாராளமாக பயன்படுத்தலாம். எதுகை, மோனை பயன்படுத்தப்பட்ட தன்மை நவிற்சி அணி கொண்ட பாடல் ஒன்றைப் பார்ப்போம். இந்தப் பாடலை அவ்வையார் எழுதியதாக சொல்லப்படுகிறது.

இருந்து முகந் திருத்தி
ஈரோடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப
வருந்தி ஆடினாள் பாடினாள்
ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத்தான்

ஒருவன் வீட்டிற்கு விருந்தாளியை அழைத்து வருகின்றான். அவனுக்கு மனைவியிடம் விருந்தாளி வந்திருக்கின்ற விடயத்தை சொல்லப் பயம். ஆகவே அவன் மனைவியுடன் கனிவாகப் பேசி, அவளுக்கு ஈரும் பேனும் பார்த்து, 'ஐஸ்' வைத்து, மெதுவாக விருந்தாளி வந்திருக்கின்ற விடயத்தை சொல்கிறான். அவ்வளவுதான். அவள் ஒரு ஆட்டம் ஆடி விட்டாள். அவனை கண்டபடி திட்டி பழைய சுளகு ஒன்றை எடுத்து கணவனை விளாசித் தள்ளுகிறாள். அடி வாங்கிய கணவனும் ஓடினான். வந்த விருந்தாளியும் ஓடினான். இந்தக் காட்சியை இந்தப் பாடல் சொல்கிறது.

## அணிகள் அறிவோம்

எழுதுபவர் : வி. சபேசன்

இந்தப் பாடல் நடந்த விடயத்தை எந்த ஒரு உவமையோ, உருவகமோ இல்லாமல் அப்படியே சொல்கிறது. இது தன்மை நவிற்சி அணிக்குள் வருகிறது. ஆனால் இங்கே எதுகையும் மோனையும் வருவதைக் கவனித்திருப்பீர்கள். எதுகை மோனை போன்றவற்றையும் தவிர்த்துக் கொண்டு தன்மை நவிற்சி அணியில் கவிதை எழுத முயன்றால் அது சற்றுக் கடினமாகவே இருக்கும்.

ஆனால் புதுக் கவிதை எழுதுகின்ற சிலர் இதை திறம்படச் செய்வதை நான் கண்டிருக்கிறேன். அதுவும் ஹைக்கூ கவிதை எழுதுபவர்கள் இதில் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களின் கவிதையில் எவ்வித மிகைப்படுத்தலும் இருக்காது. உவமை, உருவகம், எதுகை, மோனை என்று எந்த அணிகளும் இருக்காது. ஆனால் கவிதைக்கே உரிய அழகும், ஆழமும் அவர்களின் சொற்களில் இருக்கும்.

'இரவில் வாங்கினோம்
இன்னும் விடியவில்லை'

என்ற கவிதை வெகு பிரபலமானது. எழுதியது யார் என்று தெரியவில்லை. பலர் இதைப் பயன்படுத்தி விட்டார்கள். இதுவும் தன்மை நவிற்சி அணிதான். அதே போன்று

'ஒரே கட்டிலில் உறங்குகிறோம்.
வெவ்வேறு கனவுகள் காண்கிறோம்'

என்ற கவிதையையும் உதாரணத்திற்கு எடுக்கலாம். இந்தக் கவிதைகள் 'பிறிது மொழிதல் அணி' என்ற வகைக்குள்ளும் வரும். (பிறிது மொழிதல் அணி பற்றி பின்பு பார்ப்போம்)

'பிறிது மொழிதல் அணி' கூட வராமல் நேரடியாக நடந்ததை சொல்கின்ற அழகான தன்மை நவிற்சிக் கவிதைகளும் உண்டு. புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதுகின்ற கவிதைகளின் பல வரிகளில் இதை நான் கண்டிருக்கிறேன். புதுவை ரத்தினதுரை எழுதுகின்ற கவிதைகள் மிகவும் அற்புதமானவை. சற்று நீளமாக அவர் எழுதுகின்ற கவிதை வரிகளில் அனைத்து விதமான அணிகளுமே வந்து போவது உண்டு.

புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைகள் மிக நீளமாக இருப்பதோடு, தொடர்ச்சியான முறையில் அமைந்திருப்பதாலும் அவருடைய கவிதைகளில் ஒன்றை இங்கே தர முடியவில்லை. சில வரிகளை மட்டும் வெட்டித் தருவது முறையா என்றும் தெரியவில்லை.

இந்த நேரத்தில் உயர்வு நவிற்சி அணி என்றால் என்னவென்று சுருக்கமாக பார்த்து விடுவோம். ஒரு விடயத்தை மிகைப்படுத்தி உயர்த்தி அழகுபடச் சொல்வதுதான் உயர்வு நவிற்சி அணி. உதாரணமாக 'வானைத் தொடும் கட்டிடங்கள்' என்ற வரியை எடுப்போம்.

வானைத் தொடக் கூடிய கட்டிடங்கள் எங்குமே இல்லை. கட்டிடங்கள் உயரமாக இருப்பதை சொல்வதன் பொருட்டு, கட்டிடங்கள் வானைத் தொடுவதாக மிகைப் படுத்தப்பட்டு உயர்வாக சொல்லப் படுகின்றன.

அப்படியே தற்குறிப்பேற்ற அணி பற்றியும் பார்த்து விடுவோம். நடக்கின்ற ஒரு நிகழ்ச்சிக்கு கவிஞர் தன்னுடைய கற்பனையையும் சேர்த்துக் கூறுவதை தற்குறிப்பேற்ற அணி என்பார்கள். கவிஞர் தன்னுடைய குறிப்பையும் அங்கே ஏற்றுகிறார் என்று இதற்குப் பொருள். உதாரணமாக ஒரு சம்பவத்தை பார்ப்போம்.

மக்கள் போரினால் வீடுகள் இழந்து அகதிகளாக நிற்கிறார்கள். அப்பொழுது மழையும் பெய்கிறது. இதை ஒரு கவிஞர் 'மக்கள் அழுவதைப் பார்த்து வானமும் அழுகிறது' என்று சொன்னால் அது தற்குறிப்பேற்ற அணி ஆகி விடுகிறது. மக்கள் அழுவது உண்மை. மழை வருவதும் உண்மை. இதை இரண்டையும் தொடர்புபடுத்தி கவிஞர் தன்னுடைய குறிப்பையும் தருகிறார். இதுவே தற்குறிப்பேற்ற அணி.

உயர்வு நவிற்சி அணியையும், தற்குறிப்பேற்ற அணியையும் சிலர் ஒன்றாகப் போட்டுக் குழப்பி விடுவார்கள். இரண்டிற்கு வித்தியாசம் இருக்கின்றன. அடுத்த முறை இந்த இரண்டு அணிகள் பற்றியும் விரிவாக விளக்குகிறேன்.

நான் பொதுவாக ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அணிகள் பற்றி விளக்குவதுதான் வழக்கம். இம் முறை மூன்று அணிகளைப் பற்றி சொல்ல விளைந்ததில் காரணம் இருக்கிறது.

புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைகளுக்கு நான் மிகப் பெரிய ரசிகன். தன்மை நவிற்சி அணி, உயர்வு நவிற்சி அணி, தற்குறிப்பேற்ற அணி என்ற மூன்று அணிகளும் அவருடைய கவிதைகளில் கொட்டிக் கிடக்கின்றன.

இந்த மூன்று அணிகள் பற்றியும் அறிந்து விட்டு அவருடைய கவிதை ஒன்றைப் படித்துப் பாருங்கள். எந்த வரிகளில் என்ன அணிகள் இருக்கின்றன என்று கவனியுங்கள். அதன் பிறகு இந்த அணிகளை நீங்கள் மறந்து போகின்ற நிலை வராது.

- தொடரும்.


MARKANDAN & CO
Solicitors & Administrators for Oaths

We are Specialised in....

Work Permit
(புதிய விண்ணப்பங்கள், மீளப் புதுப்பித்தல், காலவரை நீடிப்பு)

Student Visa
(புதிய விண்ணப்பங்கள், காலவரை நீடிப்பு)

Student Visa Appeal
(மேல் முறையீடு)

Asylum Appeal
(அகதி அந்தஸ்த்துக்கான விண்ணப்பம், முறையீடு)

Post Studies Work

முக்கிய குறிப்பு

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரி உள்ளவர்களுக்கு, பிரித்தானியாவின் 'LP' என்ற பிரபலமான இலங்கைத் தமிழரின் அகதி விண்ணப்பம் வெற்றி பெற்ற நிலையில் அதனை பிரித்தானிய நீதிமன்றம் (AIT) Country Guidance ஆக ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் இலங்கையில் குறிப்பிட்ட எந்தவொரு விதத்திலும் (12 விதமான Principle Risk Factors) பாதிக்கப்பட்டவர்கள் (Fresh Application) புதிய விண்ணப்பம் மூலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

European Court Appeals
100% success

- House / Flat
- Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation
- Bankruptcy
- Divorce

பிற நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்கு வருவதற்கான Sponsors (Entry Clearance Sponsorships)

Family Reunion
(கணவன் அல்லது மனைவி பிரித்தானியாவில் வசிப்பவராயின் அவரது குடும்பத்திற்கான visa நடைமுறைகள்)

Permanent Residency (நிரந்தர வதிவிடவுரிமை)

EEA Dependent Spouse Visa
(ஐரோப்பிய வதிவிடவுரிமை உள்ளவர்களுடைய கணவன் அல்லது மனைவியிற்கான விண்ணப்பங்கள்)

Same Day Visa Extension
(ஒரே நாளில் visa மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள்)

ECHR Application (பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்த உள்ள ஒருவரின் நாடுகடத்தலுக்கு எதிரான விண்ணப்பம்)

100% Success in refund from college and universities (College, University களிலிருந்து பணத்தை மீளப்பெறுவதில் 100% வெற்றி கிடைக்கும்)

Personal Injury

*Have you been given Payment Protection Insurance by your bank (Lender)? **We may be able to reclaim the whole amount.***

No Win – No Fee
விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டாடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.



845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 0208 514 8188 Fax: 0208 514 8303
Mob: 07958 618 106
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.